# புத்தரின் கொள்கைகளை பிரதமர் பாராட்டுகிறார்

மார்ச் 05, 2024

தாய்லாந்தில் உள்ள லட்சக்கணக்கான பக்தர்கள் பிப்ரவரி 23 முதல் மார்ச் 3, 2024 வரை பாங்காக்கில் உள்ள புத்தர் மற்றும் அவரது சீடர்களான அரஹந்த் சரிபுத்தா மற்றும் அரஹந்த் மகா மொகல்லானா ஆகியோரின் புனிதமான நினைவுச்சின்னங்களுக்கு அஞ்சலி செலுத்தியபோது, பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புத்தரின் கொள்கைகளை பாராட்டினார்.

அடுத்து வரும் நாட்களில் புனிதமான இடங்களான சியாங் மாய், உபோன் ரட்சத்தானி மற்றும் கிராபி ஆகிய இடங்களில் பக்தர்கள் வந்து வணங்குமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

பிரதமர் X-ல் வெளியிட்ட பதிவு:

"இந்தியாவிற்கும் தாய்லாந்துக்கும் இடையே ஆழமான உறவை வளர்த்து, ஆன்மீக பாலமாக விளங்குகிறது புத்தரின் கொள்கைகள். பக்தர்கள் ஆன்மீக ரீதியில் வளமான அனுபவத்தைப் பெற்றதில் மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், பக்தர்கள் சியாங் மாய், உபோன் ரட்சத்தானி, மற்றும் கிராபி ஆகிய இடங்களில் மரியாதை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்."

**புது தில்லி**
**மார்ச் 05, 2024**